விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 193 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 16 செவ்வாய்க்கிழமை (30.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## யாழ். மறை மாவட்டத்தின் புதிய ஆயராக பிள்ளைநாயகம்

### பாப்பரசரால் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் அவர்கள் திருத்தந்தை 14ஆம்லியோ அவர்களால் நேற்று (29) திங்கட்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## இனவாத, மதவாத அரசியலுக்கு சாவுமணி அடிக்கப்பட்டுள்ளது

### அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

இனவாத மற்றும் மதவாத அரசியல் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு சாவுமணி அடிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சம்மேளனத்தின் 76 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் நேற்று முன்தினம்

15ஆம் பக்கம் பார்க்க

# வவுனியாவில் ஆளுநருக்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

### வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன

(வவுனியா)

வவுனியா மாநகரசபை முதல்வர் காண்டீபன், ஆளுநரால் பதவி நீக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவில் நேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

*(16 ஆம் பக்கம் பார்க்க)*



## நாவற்குழியில் வன்முறை கும்பல் அட்டகாசம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் நாவற்குழியில் வன்முறைக் கும்பல்

15ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் கையிருப்பு தாராளம்

(கொழும்பு)

நாட்டில் எரிபொருள் கையி

15ஆம் பக்கம் பார்க்க

## பெற்றோல், டீசல் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் சில எரிபொருள் வகைகளின் விலையைக் குறைத்து திருத்தம் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய 92 ஒக்டேன் பெற்றோல் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 414 ரூபாவாகவும் லங்கா ஒட்டோ டீசல் விலை 25 ரூபாவினால் குறைக்

15ஆம் பக்கம் பார்க்க

## ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை இனம்காணும் முயற்சி இறுதிக்கட்டத்தில்

### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல



(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் பிரதான சூத்திரதாரிகளை இனம்காணும் முயற்சி இறுதிக் கட்டத்தில் உள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

ஹோமகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போதைப் பொருள் ஒழிப்பு வேலைத் திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே

02ஆம் பக்கம் பார்க்க

## போதைப்பொருளுடன் தொடர்புடைய பலர் விரைவில் கைதாவார்கள்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால



(கொழும்பு)

போதைப்பொருளுடன் தொடர்புடைய பலர் விரைவில் கைதாவார்கள் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக

16ஆம் பக்கம் பார்க்க

## அரச உயர் அதிகாரிகள் சொத்துக்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு இன்றுடன் முடிவு

(கொழும்பு)

அரச உயர் அதிகாரிகள் தமது சொத்து மற்றும் பொறுப்புப் பிரகடனங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு இன்று 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையுடன் முடிவடையவுள்ளதாக கையூட்டல் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

குறித்த காலக்கெடுவிற்குள் பிரகடனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அரச உயர் அதிகாரிகளுக்கு எதிராக ஊழல் எதிர்ப்புச்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மருத்துவர் அருள்மொழி கொழும்புக்கு இடமாற்றம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த இரு தசாப்தங்களாகச் சிறுவர் மருத்துவ விசேட வைத்திய நிபுணராக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய மருத்துவர் அருள்மொழி தற்போது கொழும்பு சீமாட்டி வைத்திய சாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

அவரது சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நேற்று சிறப்பாக இடம்பெற்றது. (ம-7)

## ஈஸ்டர்...

இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்க நாங்கள் நீண்டகாலமாக முயற்சித்து வருகிறோம். இன்னும் முயற்சித்து வருகிறோம். தற்போது அதன் இறுதிக் கட்டத்துக்கு வந்திருக்கிறோம்.

அதேபோன்று போதைப் பொருள் கடத்தல்காரர்களின் பிரதான சூத்திரதாரிகள் யார் எனக் குறிப்பிட்டளவானவர்களை இனம் கண்டிருக்கிறோம்.

போதைப்பொருளுடன் நேரடியாகத் தொடர்புடைய வியாபாரிகளையே நாங்கள் ஆரம்பமாக இனம் கண்டோம். தற்போது உயிர்த்த ஞாயிறு பிரதான சூத்திரதாரியைப் போன்றே இந்தப் போதைப்பொருள் கடத்தல்களுக்குப் பின்னால் இருந்த பிரதான சூத்திரதாரிகளை எங்களுக்கு கைது செய்ய முடியுமாக இருந்தது. இவர்கள் மனிதர்களைக் கொலை செய்யவும் பணம் எடுக்கிறார்கள். மனிதர்களைப் பாதுகாக்கவும் பணம் எடுக்கிறார்கள். மக்களிடமிருந்து சம்பளமும் பெறுகிறார்கள். இந்த மூன்று விடயங்களும் கடந்த காலங்களில் இடம்பெற்றிருப்பது, அண்மையில் இடம்பெற்ற கைதுகளின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

வரலாற்றில் எந்த அரசாங்கக் காலத்திலும் மேற்கொள்ளாத வகையில், தற்போதைய அரசாங்கம் அனைத்தையும் சட்ட ரீதியில் மேற்கொண்டு வருவதால், இந்தப் போதைப் பொருள் கடத்தல்கள் வியாபாரிகளுக்குப் பின்னால் இருந்து செயற்படுபவர்களைக் கைது செய்ய முடியுமாக இருக்கிறது.

கடந்த காலங்களைப் போல் அல்லாமல் சட்டம் அனைவருக்கும் சமம் என்ற அடிப்படையில் தற்போது ஆரம்பித்திருக்கிறது. அதனால் தற்போது பழைய அரசியல் அதிகாரிகள் திடுக்கிட்டுள்ளனர். அவர்கள் மக்களுக்கு எதிராகச் செய்த நடவடிக்கைகள் அனைத்தும் வெளிச்சத்திற்கு வருகின்றன. மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து வாழ்ந்துவந்த அவர்களின் மறைவான வாழ்க்கையை வெளிப்படுத்து வதற்கு அரசாங்கத்துக்கு முடியுமாக இருக்கிறது என்றார். (ம-7)

# ஈழத்துச் சிதம்பரத்தில் மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் யாழ்ப்பாணம் காரைநகர் சிவன் கோவிலின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

அதனை முன்னிட்டு கும்பாபிஷேக பூர்வாங்கக் கிரியைகள் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமானது. நாளை மறுதினம் 2ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் எதிர் வரும் சனிக்கிழமை வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தி வழிபடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கிணற்றில் தவறிவீழ்ந்து தாய், மகள் உயிரிழப்பு

(கொழும்பு)

கலேவெல, தென்னகோன்புர துபார பகுதியில் விவசாயக் கிணறு ஒன்றில் தவறி வீழ்ந்து தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,


மீன்பிடிப்பதற்காகத் துபார குளத்திற்குச் சென்ற தனது மகன், நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாததால், அவரைத் தேடி குறித்த தாய் தனது மகளையும் அழைத்துக் கொண்டு குளக்கரைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, துபார குளப் பகுதியில் வெட்டப்பட்டிருந்த விவசாயக் கிணறு ஒன்றில் தாயும் மகளும் தவறி விழுந்தமையினாலேயே குறித்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

இவ்விபத்தில் தலகிரியாகம பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய தாயும் அவரது 10 வயதுடைய மகளுமே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# ஜேர்மனியில் துப்பாக்கிச்சூடு ஆறு பேர் பலி; பலர் படுகாயம்



ஜேர்மனியின் வடக்குப் பகுதியில் உள்ள ஸ்டாடே நகரில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இளைஞர் நல மையம் ஒன்றின் அருகே துப்பாக்கிச் சூடு நடைபெற்றதாகவும் இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஒருவர் முக்கிய சந்தேகநபர் எனவும் பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

படுகாயமடைந்தவர்களின் விபரங்கள் இதுவரை வெளிவராத நிலையில் பொலிஸார் சம்பவ இடத்தில் தீவிர தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

31ஆம் நாள்
நினைவஞ்சலி



தோற்றம்
20.11.1943

மறைவு
31.05.2026

அமரர் வீரவாகு தெய்வானை

அணைந்தது எங்கள் குலவிளக்கு
ஆனது மாதம் ஒன்று
ஆறவில்லை எங்கள் மனம் இன்று
அழியாது உங்கள் நினைவுகள் இங்கு
தேடினாலும் கிடைக்காத எங்கள் செல்வமே
வாடியே வாழ்கின்றோம் நாமிங்கு
கனக்கும் இதயங்கள் கண்ணீர் சொரிய
நெஞ்சம் தேடும் உம் நினைவுகளே.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்:-
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், மருமக்கள்

அம்பன்,
குடத்தனை.

(C-5952)

கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தின்
வல்வெட்டித்துறை சமுர்த்தி வங்கியில்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக்
கடமையாற்றும் திருமதி சிவகரன் சசிகலா
அவர்களின் பாசமிகு தாயார்



(C-5949)

அமரர் சின்னராசா
செல்லத்திரவியம்

அவர்கள் 29.06.2026 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்
[illegible]

மறைவு
29.06.2026

பிரிவுத்துயருடன்:- பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறார்களை வேலைக்கு அமர்த்தினால் ஒரு இலட்சம் அபராதம்!

## அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

**சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனையை கடுமையாக்க பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுக்கான வேலைவாய்ப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.**

அதன்படி தற்போதைய அபராதத் தொகையான பத்தாயிரம் ரூபாயை, ஒரு இலட்சமாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

அபராதத்துடன் சேர்த்து, 12 மாதங்கள் வரை சிறைத் தண்டனை வழங்கவும் இந்த சட்ட மூலம் வழிவகை செய்கிறது.

அதேநேரம், குற்றம் நிரூபிக்கப்படும் நபர்களுக்கு நீதிமன்றம் அபராதம், சிறைத் தண்டனை அல்லது இவை இரண்டையும் சேர்த்து விதிக்க அதிகாரம் அளிக்கப்படுகிறது. (நி)



## வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் சீனப் பெண் கைது

(கொழும்பு)

42 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கடத்த முற்பட்ட வெளிநாட்டுப் பெண் ஒருவர் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட சந்தேக நபர் நேற்று அதிகாலை சீனாவின் குன்மிங் நகரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து சீனாவில் தயாரிக்கப் பட்ட 28,000 சிகரெட்டுகளை சுங்க அதிகாரிகள் கண்டெடுத்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 40 வயதுடைய சீன நாட்டு பெண் தொழில திபர் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## கிளிநொச்சியில் வீதி விபத்துக்களால் இதுவரை 14 பேர் உயிரிழப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையான காலப் பகுதியில் வீதி விபத்துக்களால் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிளிநொச்சி நகரப் பகுதியில் அதிகரித்த வேகம் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்துதல் என்பவற்றால் அதிகளவான வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

2026 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதத் தரவுகளின் படி ஜனவரி 1 முதல் மே 31 வரையான காலப் பகுதிகளில் 14 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர்.

இந்த மாதத்தில் இடம்பெற்ற விபத்துக்களில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் 147 ஆகக் காணப்பட்ட மொத்த விபத்துகளின் எண்ணிக்கை, 2024 இல் 129 ஆகவும், 2025 இல் 141 ஆகவும் பதிவாகியுள்ளன.

இந்த விபத்துகளினால் 2023 இல் 32 பேரும், 2024 இல் 28 பேரும், 2025 இல் 29 பேருமாக மொத்தம் 89மனித உயிர்கள் வீதிகளிலேயே பலியாகியுள்ளன.

அதேநேரம், இக் காலப் பகுதியில் 155 பாரிய விபத்துக்களும், 146 சிறு விபத்துகளும், 33 சொத்துச் சேத விபத்துகளும் பதிவாகியுள்ளன.

அத்துடன் ஐந்து மாதங்களுக்குள் கிளிநொச்சி பொலிஸாரால் 968 மதுபோதையில் வாகனம் செலுத்திய வழக்குகளும், முதன்முறையாக 23 போதைப் பொருள் பாவித்து வாகனம் செலுத்தியமைக்கான வழக்குகளும், 162 அபாயகரமான முறையில் வாகனம் செலுத்திய வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (8-315)

## இலங்கை- வியட்நாம் இடையே நேரடி விமான சேவை

(கொழும்பு)

இலங்கைக்கும் வியட்நாமிற்கும் இடையே புதிய நேரடி விமான சேவை வாரத்திற்கு மூன்று முறை இயக்கப்படவுள்ளது.

இந்த புதிய நேரடி விமான சேவை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

வியட்நாமின் முன்னணி விமான சேவை நிறுவனமான வியட்நாம் ஏர்லைன்ஸ், ஹோ சி மின் நகரத்திற்கும் கொழும்புக்கும் இடையே இந்த சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. (3)

## வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களின் வாக்களிப்பு உரிமை குறித்து பரிசீலனை

(கொழும்பு)

வெளிநாடுகளில் வாழும் இலங்கை பிரஜைகள் வாக்களிப்பதற்கு வசதியாக பல முன்மொழிவுகள் குறித்து அமைச்சரவை தீவிரமாக பரிசீலித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பிரஜைகள் தேர்தல் நாளன்று அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களுக்கு நேரில் சென்று வாக்களிப்பது ஒரு முன்மொழிவாக உள்ள அதேவேளை, டிஜிற்றல் முறையிலான வாக்களிப்பு முறையை மற்றொரு முன்மொழிவு பரிந்துரைப்பதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை பிரஜைகள் எவ்வாறு வாக்களிக்கலாம் என்பது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவினால் இந்த முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு இந்த உப குழுவானது தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் ஏனைய பங்குதாரர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று முன் மொழிவுகளை தயாரித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ந)

## டெங்குத் தொற்றினால் நிரம்பி வழியும் வைத்தியசாலைகள்

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு பாதிப்பு தீவிரமடைந்துள்ள நிலையில், அதிகரித்து வரும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் கையாள நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகள் முழு கொள்ளளவை எட்டியுள்ளதால், நோயாளிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தினமும் நூற்றுக் கணக்கான புதிய நோயாளிகள் அனுமதிக்கப்படுவதால் டெங்கு வார்டுகளில் இட நெருக்கடி அதிகரித்து, அவை நிரம்பி வழிவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

சிகிச்சை நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகக் கூறப்பட்டாலும், நோயாளிகளின் பெருமளவிலான வருகையானது வைத்தியசாலையின் வளங்கள் மற்றும் பணியாளர்கள் மீது கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. மேல் மாகாணத்தில் நிலைமை குறிப்பாக மிகவும் மோசமாக உள்ளது.

அதேவேளையில் காலி, மாத்தறை, கேகாலை மற்றும் கண்டி ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளிலும் நோயாளிகள் அனுமதிக்கப்படும் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

இதனிடையே, டெங்கு நோயாளிகளுக்குத் தீவிர மருத்துவக் கண்காணிப்பு தேவைப்படுவதால், அவர்களுக்கு வீட்டில் வைத்துச் சிகிச்சை அளிக்கக்கூடாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபத் சுகததாச தெரிவித்தார்.

மேலும் வைத்தியர்களின் பற்றாக்குறை குறித்தும் சுட்டிக்காட்டிய அவர், அதிகரித்து வரும் நோயாளிகளின் எண்ணிக்கை சுகாதார அமைப்பின் மீது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் எச்சரித்தார்.

நாட்டில் தற்போது நாளொன்றுக்கு 600 முதல் 700 வரையிலான டெங்கு நோயாளிகள் பதிவாகி வருவதாகவும், இந்நோய் மேலும் தீவிரமடைவதைத் தடுக்க அவசரத்தடுப்பு நடவடிக்கைகள் தேவை என்றும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் வைத்தியர் கபில கண்ணங்கர தெரிவித்துள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் கரணவாய் கிழக்கிற்கு 3 தங்கப் பதக்கங்கள்







கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகள் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

குறித்த போட்டிகளில் கரணவாய் கிழக்கு விளையாட்டு கழகத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் மூன்று தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர்.

இதில் ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் கரணவ்ாய் கிழக்கு விளையாட்டு கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கிந்துஜன் தங்கப் பதக்கத்தையும் அதே கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த நிலக்சன் வெள்ளிப் பதக்கத்தையும் கலட்டி ஐக்கிய் சன சமூக நிலைய விளையாட்டு கழ்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்த அருள்குமரன் வெள்ளிப் பத்க்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் கரணவாய் கிழக்கு விளையாட்டு கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த அபிராம் தங்கப் பதக்கத்தையும் இமையாணன் மத்தி விளையாட்டு கழகத்தைப் பிரதி நிதித்துவம் செய்த திவான்சயன் வெள்ளிப் பதக்கத்தையும் கலட்டி ஐக்கிய சன சமூக நிலைய விளையாட்டு கழ்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பவிதாஸ் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் கரணவாய் கிழக்கு விளையாட்டு கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த மதுசியா தங்கப் பதக்கத்தையும் அதே கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சபானா வெள்ளிப் பதக்கத்தையும் கலட்டி ஐக்கிய சன சமூக நிலைய விளையாட்டு கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கனிஷா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து பென் ஸ்டோக்ஸ் திடீர் ஓய்வு!



இங்கிலாந்து டெஸ்ட் கப்டன் பென் ஸ்டோக்ஸ், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

நியூசிலாந்துக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் நடுவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனையடுத்து மைதானத்தில் இருந்த ரசிகர்கள் எழுந்துநின்று பென் ஸ்டோக்கிற்கு மரியாதை செலுத்தினர்.

2011 இல் சர்வதேசப் போட்டிகளில் அறிமுகமான ஸ்டோக்ஸ், 2022 முதல் அணிக்கு தலைமை தாங்கி வருகிறார். 2019 இல் நியூசிலாந்துக்கு எதிரான இறுதிப் போட்டியில் 84 ஓட்டங்கள் குவித்து, இங்கிலாந்து அணி முதன்முறையாக உலகக் கோப்பையை வெல்ல முக்கியக் காரணமாக இருந்தார்.

ஆஷஸ் ஹெடிங்லி டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக் ஒற்றை ஆளாகப் போராடி 135 ஓட்டங்கள் குவித்து வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றுத் தந்தார். 2022இல் பாகிஸ்தானுக்கு எதிரான இறுதிப் போட்டியில் அதிரடியாக விளையாடி இங்கிலாந்து அணிக்கு ரி-20 உலகக் கோப்பையையும் வென்று கொடுத்தார்.

இங்கிலாந்து கிரிக்கெட்டின் மிகச்சிறந்த ஆல்-ரவுண்டர்களில் ஒருவரான பென் ஸ்டோக்ஸின் இந்த ஓய்வு முடிவு, உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (3)

## உலக கிண்ண கால்பந்து

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி கனடா அடுத்த சுற்றுக்கு தகுதி

கால்பந்து தொடரின் "ரவுண்ட் ஓப் 32" சுற்றில், தென்னாப்பிரிக்காவை எதிர்கொண்ட கனடா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தென்னாப்பிரிக்க அணி மிகச்சிறப்பாகத் தற்காப்பு ஆட்டத்தை வெளிப்படுத்தியது, குறிப்பாக அந்த அணியின் கோல்கீப்பர் ரோன்வென் வில்லியம்ஸ் பல அபாயகரமான வாய்ப்புகளைத் தடுத்து நிறுத்தினார்.

ஆட்டத்தின் இரண்டாவது பாதி காயம் காரணமாக ஓய்வில் இருந்த கனடா அணியின் நட்சத்திர வீரர் அல்போன்சோ டேவிஸ் களமிறங்கியது ஆட்டத்தின் போக்கை மாற்றியது.

இறுதியாக, ஆட்டத்தின் கூடுதல் நேரத்தில், ஸ்டீபன் யூஸ்டாக்கியோ அடித்த கோல் கனடா அணிக்கு வரலாற்று வெற்றியைத் தேடித்தந்தது.

இந்த வெற்றியின் மூலம் கனடா அணி கால்பந்து தொடரில் முதல் முறையாக நாக்-அவுட் சுற்றில் வெற்றி பெற்று அடுத்த நிலைக்கு முன்னேறியுள்ளது.

கனடா அணி தனது அடுத்த சுற்றில் நெதர்லாந்து அல்லது மொராக்கோ அணிகளில் ஒன்றை எதிர்கொள்ளும்.

தென்னாப்பிரிக்க அணி கால்பந்து தொடரில் முதல்முறையாக நாக்-அவுட் சுற்று வரை முன்னேறி சிறப்பாகச் செயற்பட்டுள்ளது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அரச வருமானம் 2026 இல் வீழ்ச்சியடையும்

## நிதி அமைச்சு அறிவிப்பு

**(கொழும்பு) ---------------------- கடந்த 2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், நடப்பு 2026 ஆம் ஆண்டில் இலங்கையின் ஒட்டுமொத்த அரச வருமானம் கணிசமாகக் குறையும் என நிதி அமைச்சு உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளது.**

நிதி அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள 2027ஆம் ஆண்டுக்கான நிதி மூலோபாய அறிக்கையிலேயே இந்த விபரங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மானியங்கள் உள்ளடங்கலாக 2025ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 16.7 சதவீதமாகக் காணப்பட்ட ஒட்டு மொத்த அரச வருமானம், இந்த 2026 ஆம் ஆண்டில் 15.8 சதவீதம் வரை வீழ்ச்சியடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடந்த 2025ஆம் ஆண்டில் நாட்டில் வாகன இறக்குமதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம், அரசாங்கத்திற்கு ஒரு முறை மாத்திரம் கிடைக்கப் பெற்ற பாரிய வரி வருமான அதிகரிப்பு ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டில் வருமான சேகரிப்பு மீண்டும் அதன் சாதாரண நிலைக்குத் திரும்பியமையே இந்த வீழ்ச்சிக்கு முக்கியக் காரணம் என நிதி அமைச்சு விளக்கியுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி காலத்தில், இலங்கையின் அரச வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4 சதவீதம் வரை மிக மோசமாக வீழ்ச்சியடைந்திருந்தது.

இது அந்த காலகட்டத்தில் உலகிலேயே மிகக் குறைந்த வருமான மட்டங்களில் ஒன்றாக அமைந்திருந்ததாக நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இந்த வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடுமையான வரி ஆளுமைக் கொள்கைகள் மற்றும் வருமான நிர்வாக சீர்திருத்தங்கள் காரணமாக வரி அடிப்படை விரிவடைந்துள்ளது.

அத்துடன் வரி ஏய்ப்பு மற்றும் வரி இழப்புகளைக் குறைப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் தற்போதைய வருமான நிலை ஓரளவு ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு வருமானச் சீர்திருத்தங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட போதிலும், சர்வதேச ரீதியாக நிலவும் சில காரணிகள் நாட்டின் பொருளாதார இலக்குகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையலாம் என நிதி அமைச்சு எச்சரித்துள்ளது.

குறிப்பாக, மத்திய கிழக்கின் தற்போதைய புவிசார் அரசியல் சூழ்நிலைகள், உலகளாவிய வர்த்தகத் தடைகள் மற்றும் சர்வதேச எரிசக்தி சந்தையில் ஏற்படக்கூடிய திடீர் மாற்றங்கள் காரணமாக, எதிர்காலத்தில் அரசாங்கம் திட்டமிட்டுள்ள அரச வருமான இலக்குகளைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வது பெரும் சவாலாக அமையலாம் என நிதி அமைச்சு மேலும் வலியுறுத்தியுள்ளது. (நி)

# பல்கலை செயற்பாடுகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கையின் பல்கலைக்கழக முறைமையில் நிலவும் சவால்கள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகள் குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று, எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நடைபெறவுள்ளது.

கல்விஅமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழகக் கட்டமைப்பில் தற்போதுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றுக்கான உடனடித் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வது, பல்கலைக்கழக முறைமையின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் எதிர் கால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளது.

பல்கலைக்கழகக் கல்வியின் தரம் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளைப் பலப்படுத்துவதன் ஊடாக, மாணவர்களின் கல்விச் சூழலை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர். (நி)


# இராசிபலன்


30.06.2026
ஆனி 16, செவ்வாய்க்கிழமை
பூரணை காலை 5.59 மணிவரை


பூராடம் முழுவதும்
சுப நேரம் 10.26-11.56 மணிவரை
இராகு காலம் 2.56-4.26 மணிவரை

சந்திராஷ்டமம்- மிருகசீரிடம்


வளவன்



**மேஷம்**
சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பயணங்கள் கை கூடும் வாய்ப்புண்டு.



**கடகம்**
வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.



**துலாம்**
வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும், சேமிப்பை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும்.


**மகரம்**
தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.


**இடபம்**
கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, மனக்கஷ்டம் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள், பிரயாண பயமுண்டு.


**சிம்மம்**
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம் பெறலாம்.


**விருச்சிகம்**
உறவினர் வருகை உண்டு, வாய்ப்புகள் உங்களை தேடி வரலாம், தனவரவு திருப்திகரமாக அமையும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


**கும்பம்**
தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


**மிதுனம்**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், நட்பு வட்டம் விரிவடையும், வெளியூர் தொடர்புகள் விரிவடையும், போசண சுகமுண்டு.



**கன்னி**
பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கை கூடும் வாய்ப்புண்டு.


**தனுசு**
காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், ஆரோக்கியம் சீராக ஆகாராத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள்.


**மீனம்**
அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீரகள்.

**சொல்லக் கூடாத பேச்சானால் அதைச் சொல்லாமல் இருப்பதே சமம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்றைய தினம் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம் பெற்றது.

## கேப்பாப்புலவில் 6 ஆவது நாளாக
# தொடரும் போராட்டம்!



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கேப்பாப்புலவில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி காணிகளுக்குரிய மக்கள் ஆறாவது நாளாக நேற்று திங்கட்கிழமை தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கேப்பாப்புலவு மக்கள்,

எங்களுடைய வாழ்க்கை, வாழ்க்கையே போராட்டம், போராட்டமே வாழ்க்கை என்ற நிலைக்கு உள்ளாகியிருக்கின்றோம்.

இனியும் இந்த போராட்டத்தை நீண்ட நாட்களாக வீதியில் இருந்தோ அல்லது மகஜர் வழியாகவோ மேற்கொள்ளாது மிக குறுகிய காலத்திலே எங்களுடைய போராட்டத்தை நிறைவு செய்ய தீர்மானித்துள்ளோம்.

ஆளுநரிடம் நாங்கள் விடுத்த கோரிக்கை, இராணுவத்தினால் எங்களிடம் முன்வைக்கப்பட்ட அநீதியான கோரிக்கைகளுக்கு தீர்ப்பு வழங்கி எங்களுடைய காணிகளை பெற்றுத்தர வேண்டும் என்பதே.

அல்லது உடனடியாக சாதகமான பதில் தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தோம் இதுவரையும் முடிவில்லை. இனி எங்களுடைய முடிவு ஆளுநர் இங்கு வரவில்லை அல்லது சாதகமான முடிவு தரவில்லை என்றால் நாங்கள் ஆளுநர் செயலகம் சென்று செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்ட எழுச்சி பேரணியை மேற்கொள்வதாக தீர்மானித்துள்ளோம் என தெரிவித்தனர். (8-299)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கக் பட்டுள்ளன.

அந்த வகையில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு, வீடு திருத்தம் செய்வதற்காக 1 இலட்சம் ரூபா நிதியும், பருத்தித்துறை மாற்றுஆற்றலுடையோருக்கான வீர, வீராங்கனைகளுக்குரிய கௌரவிப்பு நிகழ்வுக்காக 50 ஆயிரம் ரூபா நிதியும், யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையினரால் நடாத்தப்படுகின்ற, மாவட்ட முதியோர் மதிப்பளித்தல், விழா நிகழ்வுகளுக்கு 50 ஆயிரம் ரூபா நிதியும், யா/மணற்காடு றோ.க. த.க.பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, நிழற்பிரதி இயந்திரமும் வழங்கி வைக்கப்பட்டது. (8-60)

## தமிழ்த்தின வில்லிசைப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் முதலிடம்



(ஈச்சமோட்டை)

வடமாகாண தமிழ்த்தின வில்லிசைப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்று தேசிய்மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற வடமாகாண தமிழ்த்தின வில்லிசைப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியும் சமநிலைப் பெறுபேற்றைப் பெற்றிருந்தன. இதனையடுத்து வெற்றியாளரைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் மகத்தான வெற்றியைப் பெற்று வடமாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர். (8- 105)



யா/ சென் மேரிஸ் வித்தியாலய மாணவ பாராளுமன்ற அமர்வு அண்மையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

## பரிசளிப்பு விழாவும் இதழ் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலய பரிசளிப்பு விழாவும் மகாஜனனம் 2 இதழ் வெளியீடும் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை முத்துலிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் பரமநாதன் கமலதாசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.மாலதி முகுந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (8)



மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன் துறை அருள்மிகு கண்ண்ணகை அம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்- மகாலிங்கம்)

## கிளிநொச்சியில் சிறுவர்களை இலக்கு வைத்து
# புகைப் பொருட்கள் விற்பனை
### 13 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர்ப் பகுதிகளில் சிறுவர்களுக்கு சட்ட விரோதமான முறையில் புகைப் பொருட்களை விற்பனை செய்த 13 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரில் உள்ள சில வர்த்தக நிலையங்களில், சிறுவர்களை இலக்கு வைத்து தொடர்ச்சியாக சிகரெட் மற்றும் பீடி போன்ற புகைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸ் அதிகாரியின் வழிகாட்டலில் விசேட உத்தி ஒன்றை கையாண்ட பொலிஸார், சிறுவன் ஒருவரிடம் பணத்தை கொடுத்து வர்த்தக நிலையங்களுக்கு அனுப்பி புகைப் பொருட்களை வாங்குமாறு பணித்துள்ளனர்.

அதன்படி, குறித்த சிறுவன் வர்த்தக நிலையங்களுக்கு சென்று பணத்தைக் கொடுத்து புகைப் பொருட்களை பெற்றுக் கொண்ட போது, அங்கிருந்த பொலிஸார் வர்த்தகர்களை கையும் மெய்யுமாக பிடித்துள்ளனர்.


இதேபோன்று நகரின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட அதிரடி சோதனைகளின் போது, சிறுவர்களுக்கு புகைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட 13 வர்த்தக நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு ஏற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து பாதுகாக்கும் நோக்கில் இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (8-315-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொலிஸ்மா அதிபரிடம் நேரடியாக முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் வசதி



(கொழும்பு)

இலங்கை பொலிஸாரால் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ள "Tell the IGP" திட்டம், ஏதேனும் சம்பவம் அல்லது இணைய வழிச் செயற்பாடு தொடர்பான முறைப்பாடுகளை நேரடியாக பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பை பொதுமக்களுக்கு வழங்கியுள்ளது.

இச்சேவையின் மூலம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நபர்கள் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், போதைப்பொருள் கடத்தல், போக்குவரத்து விதி மீறல்கள், பொது இடையூறுகள், ஊழல் மற்றும் பிற குற்றங்களை இதன் மூலமாக பொலிஸ்மா அதிபரிடம் நேரடியாக தெரிவிக்கலாம்.

பெறப்படும் முறைப்பாடுகள் பிரிவுசார் அதிகாரிகளால் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு, உடனடியாக விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர்.

ஒரு முறைப்பாட்டுக்கு நியாயமான தீர்வு காணப்படாவிட்டால், மேலதிக மீளாய்வுக்காக அப் பிரச்சினையை பொலிஸ்மா அதிபரிடம் மீண்டும் சமர்ப்பிப்பதற்கான வசதி இம் முறையில் உள்ளது.

இச்சேவையை அதிகாரப்பூர்வ பொலிஸ் திணைக்களத்தின் இணையதளமான www.police.lk, அதற்கென ஒதுக்கப்பட்ட https://telligp. police.lk எனும் இணைப்பு அல்லது telligp@police.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றின் மூலம் அணுகலாம். (நி)

# Invitation for Bids (IFB)
## Killinochchi District Secretariat
## Road Works

The Chairman Department Procurement Committee (DPC) on behalf of District Secretariat, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table from qualified bidders who possess CIDA registration for the grade given below.

1. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** according to the Procurement guideline & Manual 2024.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in Grade mention below in Highways specialty.
3. A Completed set of bidding documents could be purchased from **30.06.2026 till 15.07.2026** between **09.00 Hrs. to 15.30 Hrs.** on working days.

| Description of Works | CIDA Grade | Contract Period (in days) | Bid Validity Period | Bid Security | |
|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (Rs.) | Validity |
| **KN/DPS/DO16/RRP -11/ 06-06** Construction of Mugamaalai Kilaali Road, Pachchilaipalli Predeshiya Sabha | **C8 and above** (Highway Construction) | 84 | 01.10.2026 | 92,000.00 | 29.10.2026 |

4. Upon Submission of **Bank Slip Rs.5000/=** paid to the Bank of Ceylon Account No **7041986 of "District Secretary, Kilinochchi"** as non-refundable fee.
5. The duly completed Bids must be delivered to **"Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Kilinochchi"** or deposited in the "Procurement Box" available in the **Chief Accountant's Room, Finance Branch** on or **before 10.00 Hrs. on 16th of July 2026**. Bids will be opened immediately after the closing of bids. Bidders or their authorized representatives are allowed to be present at the time of opening of the Bids.
6. Bidders shall submit only the purchased bid document.
7. The pre-bid meeting will be held on **10.00 am on 8th July 2026 at Chief Accountant's Room, Finance Branch, District Secretariat, Kilinochchi.**
8. All rights are reserved to the Chairman of DPC to accept, reject or partially of any bids at any stage without paying any compensation to any party.

**Chairman,**
**Departmental Procurement Committee,**
**District secretariat, Kilinochchi.**
**T.P/Fax: 021 228 5352, Web - http://Kilinochchi.dist.gov.lk**

(C-5947)

# சேவை நலன் பாராட்டு

## திரு.காங்கேசமூர்த்தி மணிவண்ணன்

**நன்னடத்தை உத்தியோகத்தர் தரம் – 1**
**நன்னடத்தை உத்தியோகத்தர் – கண்டாவளை,**
**மாவட்ட நன்னடத்தை அலுவலகம், கிளிநொச்சி**

B.Com (Hons) University of Jaffna .M.A of Social work (Merit) NISD Srilanka.
Dip in Counselling Psychology - Affiliated to National University of Ireland.
Dip in Child Protection - NISD Srilanka.

**சேவை விபரம்**

- பட்டதாரிப் பயிலுனர் - வடமாகாண நன்னடத்தை திணைக்களம் - (01.10.2004 - 06.09.2005)
- நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ( நிதி ) - வடமாகாண கணக்காய்வு அலுவலகம் - (07.09.2005- 24.02.2009)
- நன்னடத்தை உத்தியோகத்தர் - பிரதேசசெயலகம் - கரவெட்டி - (25.02.2009 - 24.11.2009)
- நன்னடத்தை உத்தியோகத்தர் - பிரதேசசெயலகம் - காரைநகர் - (25.11.2009 - 14.03.2011)
- நன்னடத்தை உத்தியோகத்தர் - பிரதேசசெயலகம் - காரைநகர், ஊர்காவற்றுறை - (15.03.2011 - 31.07.2012)
- நன்னடத்தை உத்தியோகத்தர் - தலைமைப்பீடம் நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம் - (01.08.2012 - 16.09.2012)
- நன்னடத்தை உத்தியோகத்தர் - பிரதேசசெயலகம் - உடுவில், நிலையப்பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் - நீதி நிர்வாகப்பிரிவு, மல்லாகம் - ( 17.09.2012 - 30.09.2019)
- நன்னடத்தை உத்தியோகத்தர் - பிரதேசசெயலகம் - மருதங்கேணி நிலையப்பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் - நீதி நிர்வாகப்பிரிவு, பருத்தித்துறை - (01.10.2019 - 31.03.2021)
- நன்னடத்தை உத்தியோகத்தர் பிரதேசசெயலகம் - கண்டாவளை - (01.04.2021 - 30.06.2026)

Congratulations!



அன்பு, அறிவு, பண்பு, பணிவு என
இன்முகத்துடன் இருந்து
அனைவருடனும் ஒன்றுபட்டு பேதமின்றி இணைந்து கடமையாற்றினீர்,
உம் உளவள ஆலோசனையால் பலரையும் நல்வழிப்படுத்தினீர் -உங்கள்
ஓய்வு எம் திணைக்களத்திற்கு இழப்பே!
உங்கள் ஓய்வு காலம் சிறக்க வாழ்த்துகிறோம்

**வாழ்த்துவோர் -**
**நன்னடத்தை உத்தியோகத்தர்கள் சங்கம், வடமாகாணம்**

(C-5948)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## இந்த ஆண்டே தாய்நாடு திரும்புவேன்; மரணத்திற்கும் அஞ்சமாட்டேன்

## ஷேக் ஹசீனா அதிரடி

(டாக்கா)

இந்த ஆண்டே எனது தாய்நாட்டிற்குத் திரும்புவேன் என்று முன்னாள் பிரதமர் மற்றும் அவாமி லீக் கட்சியின் தலைவர் ஷேக் ஹசீனா அதிரடியாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

நேர்காணலில் ஒன்றிலேயே அவர் இந்த விடயத்தை வெளியிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பங்காளதேஷில் கடந்த 2024 ஆம் ஆண்டு மாணவர் போராட்டங்களின் விளைவாக ஆட்சியை இழந்து நாட்டை விட்டு வெளியேறிய முன்னாள் பிரதமர் மற்றும் அவாமி லீக் கட்சியின் தலைவர் ஷேக் ஹசீனா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பங்காளதேஷிக்கு திரும்புவது என்பது தனது தனிப்பட்ட அரசியல் ஆசைக்கானது அல்ல என்று குறிப்பிட்டுள்ள ஷேக் ஹசீனா, அது பங்காளதேஷ் மக்களின் அரசியல் உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுத்தல் மற்றும் விடுதலைப் போரின் உன்னத நோக்கம் ஆகியவற்றுடன் பிணைக்கப்பட்டுள்ளது என்றார்.

"நான் அதிகாரத்திற்காக அரசியல் செய்பவள் அல்ல. பங்காளதேஷ் மக்களின் நலனுக்காகவும், தேசத்தின் தந்தை பங்காபந்து ஷேக் முஜிபர் ரஹ்மானின் "சோனார் பங்களா" என்ற கனவை நனவாக்குவதற்காகவுமே நான் அரசியல் செய்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

பங்காளதேஷில் தனக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையானது முற்றிலும் சட்டவிரோதமானது. அரசியலமைப்பிற்கு முரணானது மற்றும் அரசியல் பழிவாங்கல்களைக் கொண்டது என அவர் சாடியுள்ளார்.


நான் மரணத்திற்கு அஞ்சமாட்டேன் என்று அவர் உறுதியுடன் குறிப்பிட்டுள்ளார். (3)



## பரஸ்பர தாக்

## மீண்டும்

## அமெரிக்க



(வோஷி
ஹார்மு
அதனை
திகளில்
மேலாக
பதிலடித்
முடிவுக்கு
ரிக்காவு
கொண்
ஊட கங்

அமெரிக்க மற்றும் ஈரானிய உயர் அதிகாரிகள் கட்டாரின் தோஹா நகரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இச்சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஹார்முஸ் நீரிணையின் கடல்சார் போக்குவரத்து விவகாரங்கள் குறித்து

## சவுதி அரேபியாவில் வானூர்தி விபத்து



## 14 பேர் உயிரிழப்பு

(ரியாத்)

சவுதி அரேபியாவின் எண்ணெய் நிறுவனமான "அரம்கோ" நிறுவனத்துக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியொன்று விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சவுதி அரேபியாவின் வளைகுடா கரையோரத்தில் அமைந்துள்ள முக்கிய எண்ணெய் மற்றும் தொழில் மையமான "ராஸ் தனூரா" பகுதியில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

உயிரிழந்த அனைவரும் சவுதி பிரஜைகள் என சவுதி செய்தி நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும், இது குறித்த மேலதிக விசாரணைகளை சவுதி எரிசக்தி அமைச்சு மற்றும் தொடர்புடைய அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## வெனிசுலா நிலநடு

## குடும்பத்தை இழந்

## ஆர்ஜென்டினா கால்ப

(காரகஸ்)

வெனிசுலாவில் கடந்த புதன் கிழமை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கங்களால் பாதிக்கப் பட்டோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதி கரித்து வருகிறது.

இந்த நிலநடுக்கங்களில் சிக்கி இதுவரை 1,450 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும், 68, 900 பேர் வரை காணாமல் போயுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் துயரச் சம்பவத்தில், வெனிசுலாவின் 'கிளப் ஸ்போர்ட் மரிடிமோ டி லா குவைரா' கால்ப




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ...குதல்கள் நிறுத்தம்

## ...பேச்சுவார்த்தைக்கு
## ...கா–ஈரான் இணக்கம்

**(...ஷிங்டன்)----------**
**...முஸ் நீரிணை மற்றும்**
**...னச் சுற்றியுள்ள பகு**
**...ல் மூன்று நாட்களுக்கும்**
**...க நீடித்து வந்த பரஸ்பர**
**...டித் தாக்குதல்களை**
**...குக் கொண்டுவர அமெ**
**...வும் ஈரானும் ஒப்புக்**
**...ட்டுள்ளதாக சர்வதேச**
**...ங்கள் தெரிவிக்கின்றன.**




ஆழமாக ஆராயப்படவுள்ளன.

பேச்சுவார்த்தைகளுக்கு உடன்பட்டுள்ள போதிலும், அடுத்த 30 நாட்களுக்கு ஹார்முஸ் நீரிணையின் முழுக் கட்டுப்பாடும் ஈரானின் வசமே இருக்கும் என ஈரான் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பானது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார பதற்றங்களைக் குறைப்பதில் முக்கிய மைல்கல்லாக அமையும் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (3)

# லெபனான்- இஸ்ரேல் போர் நிறுத்தத்தை ஏற்க மறுக்கும் ஹிஸ்புல்லா



(லெபனான்)

லெபனானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் கையெழுத்திடப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஹிஸ்புல்லா தலைவர் நைம் காசிம் நிராகரித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தை இஸ்ரேலிடம் சரணடைவதற்குச் சமமான செயல் என அவர் விமர்சித்துள்ளார்.

குறித்த ஒப்பந்தம் கையெழுத்தான ஒரு நாளில் அவர் அதனை நிராகரித்துள்ளமை சர்வதேச அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (3)

# ...டுக்கம்

## ...து நிற்கும்
## ...பந்து வீரர்

...ந்து கிளப்பில் விளையாடும் ஆர்ஜென்டினா வீரர் லூகாஸ் ட்ரெஜோவின் குடும்பத்தினர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

லூகாஸ் ட்ரெஜோவின் மனைவியானினா மரணெல்லா மற்றும் அவர்களது பிள்ளைகளான ஆரோன் மற்றும் ஜன் ஹோவா ஆகியோர் நில நடுக்கத்தில் சிக்கி காணாமல் போயிருந்தனர்.

அவர்களைக் கண்டறிய கடந்த 74 மணிநேரமாகத் தீவிர தேடுதல் நடவடிக்கை நடைபெற்று வந்தது. இறுதியில், மூவரின் உடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த செய்தியை ட்ரெ ஜோவின் நண்பரும் கால் பந்து வீரருமான எட்சன் டோர்டோலெரோ சமூக வலைத்தளத்தில் உறுதிப்படுத்தினார். (3)

# வெப்ப அலையினால் பிரான்சில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிரிழப்பு

(பாரிஸ்)

ஐரோப்பா முழுவதும் நிலவும் கடுமையான வெப்ப அலை காரணமாக, பிரான்சில் இதுவரை 1,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டின் பொதுச்சுகாதார நிறுவனம் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளது.

வெப்ப அலையினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த ஆரம்பக்கட்ட தரவுகளை வெளியிட்டுள்ள அந்த நிறுவனம், மேலதிக தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் எச்சரித்துள்ளது.

இதேவேளை உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (3)



# இடிபாடுகளுக்கு இடையே பிறந்த குழந்தை

## வெனிசுலாவில் நெகிழ்ச்சி சம்பவம்



(காரகஸ்)

கொடூர பூமியதிர்ச்சியால் நிலை குலைந்துள்ள வெனிசுலாவில், இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் 72 மணி நேர அவசரக் கால அவகாசம் கடந்த நிலையிலும், ஒரு அதிசயத்தக்க மீட்புச் சம்பவம் மீட்புக் குழுவினருக்குப் புதிய நம்பிக்கையை ஊட்டியுள்ளன.

அந்த வகையில் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி கர்ப்பிணி ஒருவர் ஆண் குழந்தையை பிரசவித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்க மீட்புக் குழுவினர் லா குவைரா மாநிலத்தின் தரைமட்டமான கட்டிட இடிபாடுகளுக்குள் தீவிரத் தேடுதலில் ஈடுபட்டிருந்த போது, மெல்லியதாகக் குழந்தையின் அழுகுரல் கேட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அதிநவீன உபகரணங்கள் மூலம் கொட்டும் தூசிகளுக்கு இடையே பாறைகளை அகற்றி, போர்வை ஒன்றில் சுற்றப்பட்டிருந்த பச்சிளம் குழந்தை ஒன்றையும் தாயையும் அவர்கள் உயிருடன் மீட்டுள்ளனர்.

அதன் பின்னர் தாயும் குழந்தையும் பாதுகாப்பாக மருத்துவ மையத்திற்கு மாற்றப்பட்டு உள்ளனர்.

அத்துடன் அமெரிக்க மீட்பு வீரர்கள் அந்தக் குழந்தையைப் பத்திரமாகத் தூக்கி வரும் உணர்ச்சிகரமான வீடியோவை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது உத்தியோகபூர்வ சமூக ஊடகப் பக்கத்தில் பகிர்ந்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு வேறு குற்றச்சாட்டுகளில் கிளிநொச்சியில் மூவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி-தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் நேற்று அதிகாலை பொலிஸார் வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடு பட்டனர்.

இதன்போது, விசுவமடு பகுதியிலி ருந்து அனுமதி இன்றி மரங்களை வெட்டி யாழ்ப்பாணம் கொண்டு செல்ல முற்பட்ட இரண்டு கப்ரக வாகனங்கள் பொலிஸாரின் வீதிச் சோதனையின் மூலம் பறிமுதல் செய்யப்பட்டதுடன் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, புளியம்பொக்கணை பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றி பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றினையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளதுடன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவங்களுடன் தொடர் புடைய சந்தேக நபர்களையும், தடயப் பொருட்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தரும புரம் பொலிஸார் தெரிவித்துள்ள னர். (8-316)



புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1997- இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: HND Civil Engineer,Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17001 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்-ரேவதி<br>2இல்செவ்<br>கி-பா-10<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC, MSC, USA<br>எதிர்பார்ப்பு-உயர்பதவிகள்<br>தொ.இ: G/17006 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்- A/L, France<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>விவாகரத்தானவர்<br>தொ.இ: B/17002 | பிறப்பு-1999- இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L, தையல்<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/17008 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்- ரேவதி<br>கி-பா- 50<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:A/L, Work<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/17003 | பிறப்பு-1992- இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி-பா-20 1/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: LLB, Lawyer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/17010 |
| பிறப்பு: 1989- இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்-A/L,Photograper<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17004 | பிறப்பு-2002- இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>2 இல் சூரி செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/17013 |
| பிறப்பு: 1998- இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி-பா-34 3/4<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்: நகைவேலை<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17005 | பிறப்பு-1995- இந்து<br>நட்சத்திரம்-உத்தராடம்<br>12இல்செவ்<br>கி-பா-16 3/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: College, Teacher<br>எதிர்பார்ப்பு -அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/17022 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 604



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆறு வகை பயம்

எதிர்காலத்தை நினைத்தால் எனக்கு ரொம்ப பயமாக இருக்கு சேர்!

இப்படிச் சொல்லுகிறவர்கள் நிறையபேர் இருக்காங்க. பயப்படாத மனிதர்கள் யாருமே கிடையாது.

ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான பயம். இருந்தாலும் ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது மனிதனுக்கு ஆறு விதமான பய உணர்வுகள் வரலாமாம். எல்லாவிதமான பயமும் இந்த ஆறு வகைக் குள்ளே அடங்கும். அந்த ஆறுவகை பயமும் ஆறு எதிரிகள் மாதிரி. ஆறு எதிரிகளையும் புரிந்து கொண்டால் வாழ்க்கையிலே வெற்றியடைவது சுலபம்.

சரி அந்த ஆறுவகை பயம் என்னென்ன?

முதலாவது வறுமை பற்றிய பயம்.

இரண்டாவது பழிச்சொல் பற்றிய பயம்.

மூன்றாவது உடல்நலம் பாதிப்பு பற்றிய பயம்.

நான்காவது காதல் தோல்வி.

ஐந்தாவது முதுமை.

ஆறாவது மரணம்.

பயம் ஒரு மனநிலை தான். இந்த மனநிலையைக் கட்டுப் படுத்த முடியும். திசை திருப்ப முடியும்.

இப்ப வறுமை பற்றிய பயம் என்று முதலில் சொன்னோமே அந்த பயத்தின் அறிகுறிகள் என்ன தெரியுமா?

எதிலும் அக்கறை இல்லாமல் இருப்பது. ஒரு குறிக்கோள் இல்லாமல் இருப்பது. வறுமையை சகித்துக் கொள்வது. வாழ்க்கையில் கிடைப்பது எதுவாக இருந்தாலும் ஆட்சேபனை இல்லாமல் ஏற்றுக் கொள்வது.

மனதாலும், உடம்பாலும் சோர்ந்து போய் இருப்பது. ஆர்வம் - முனைப்பு - கற்பனைத்திறன் எதுவுமே இல்லாமல் இருப்பது. அடுத் தது.பழிச்சொல் பற்றிய பயம். அதாவது அடுத்தவர்கள் நம்மை குறை சொல்வார்களோ என்ற பயம்.

இதற்கு அறிகுறி என்ன தெரியுமா?

புதியவர்களைச் சந்திப்பதற்கு பயப்படுவது. முடிவு எடுக்க முடியா மல் குழம்புவது. பிரச்சினைகளை தவிர்க்க விரும்புவது. தாழ்வு மனப்பான்மை. வரவுக்கு மீறி செலவு செய்து இமேஜை உயர்த்துவது. குறிக்கோள் இல்லாத வாழ்க்கை இதெல்லாம் அதற்கு அறிகுறிகள்.

மூன்றாவது பயம்: உடல்நலம் பாதிப்பு பற்றிய பயம். அதாவது நோய்பற்றிய பயம். ஒரு உண்மை என்ன தெரியுமா? டாக்டரைச் சந்திப்பதில் 75 சதவீதம் பேர் தங்களுக்கு நோய் வந்துதிட்டது என்ற கற்பனையில் இருப்பவர்கள் தானாம்.

இந்த பயத்தின் அறிகுறிகள் என்ன தெரியுமா?

வியாதிக்கான அறிகுறிகள் தன்னிடம் தெரிவதாக நினைத்துக் கொள்வது. வியாதியைப் பற்றியே பேசிப்பேசி மனதை அங் கேயே வைத்தக்கொள்வது.நோய் சம்பந்தமான செய்திகளைப் படித்து, நமக்கு இப்படி ஆகிவிடுமோ என்று வேதனைப்படுவது இதெல்லாம் தான்.

நான்காவது காதல் தோல்வி பற்றிய பயம். இது ரொம்பவும் வேதனையானது. உடம்பையும் மனதையும் சீரழித்துவிடும். ஆண்களைவிடப் பெண்கள் தான் இந்தப் பய உணர்வில் அதிகமாகப் பாதிக்கப் படுபவர்கள்.

ஐந்தாவது முதுமை பற்றிய பயம். வயதான காலத்தில் எப்படி சமாளிப்பது. சுதந்திரமாக சுயமாக செயல்பட முடியாதே! இந்த நினைப்பு..

அதன்பின் மரண பயம். இது எல்லாருக்கும் பொதுவானது தான். தவிர்க்க முடியாத பயத்தை ஏற்கும் மனப்பக்குவம் வேண்டும். உழைத்துப் பணம் சேர்க்க வேண்டும். உற்சாகமாக மனதை வைத்துக் கொள்ள வேண்டும். மனதைக்கட்டுப் படுத்த தெரிந்தால் போதும்.

எல்லாம் சரியாக வந்து விடும்.

நம்ம ஆள் ஒருத்தன் சொன்னான் "சேர்.. எனக்கு வறுமை பற்றிய பயம் தான் இருந்தது. ஒரே இரவில் முப்பதாயிரம் ரூபா தயார் பண்ணி விட்டேன். இப்ப எனக்கு இன்னொரு பயம் வந்து விட்டது!" என்றான்.

"என்ன பயம்?" என்றார். "போலீஸ் கண்டு பிடித்து விடுமோ என்ற பயம் அப்படிஎன்றான்!"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 02

XXXii

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்



(நேற்றைய தொடர்ச்சி)

சைவத் தமிழர்களை பௌத்தத்திற்கு மத மாற்றம் செய்கின்ற காரியத்தை ஆட்சித் தரப்புகள் செய்யாததன் காரணமாக, ஒரு பெரும் சவாலில் இருந்து நம் சைவத் தமிழ் தப்பிக் கொண்டது.

அதேவேளை தமிழ்ப் பௌத்தர்கள் இல்லாத காரணத்தாலேயே தமிழர் தாயகத்தில் பௌத்த விகாரைகள் அமைவது எதிர்ப்புக்கு ஆளாகிறது என்ற உண்மையையும் நாம் இங்கு கூறியாக வேண்டும்.

ஆம், கிறிஸ்தவம் என்பது மேற்குலகிற்குரியது. நம் தென்கிழக்காசிய நாடுகளில் இந்து மதமே பரவிக்கிடந்தது.

இங்கு பௌத்தம் என்பதும் இந்து மதத்தின் உற்பவமே.

அவ்வாறாயின், நம் நாட்டில் மேற்கத்தைய சமயத்தைப் பிரதிபலிக்கும் தேவாலயங்கள் அமைவதையே நாம் எதிர்க்க வேண்டும்.

ஆனால் அதை நாம் செய்யவில்லை. இதற்குக் காரணம் கத்தோலிக் கத்தை- கிறிஸ்தவத்தை நம் தமிழர்களும் பின்பற்றுவதேயாம்.

மாறாக, பௌத்தம் சார்ந்த தமிழர்கள் இல்லாத போது, தமிழர் பிரதேசங்களில் எதற்காக பௌத்த விகாரைகள்? என்ற கேள்வியினூடு விகாரைகளுக்கான எதிர்ப்பு எழுகிறது.

இதற்கு நல்ல உதாரணம் தையிட்டியில் அமையப் பெற்ற பௌத்த விகாரையாகும்.

ஆம், தையிட்டியில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரை தனியார் காணிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையில் தனியாருக்குச் சொந்தமான காணிகளில் விகாரையை அமைப்பதென்பது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல.

அதேநேரம் ஒரு சைவ ஆலயம் அல்லது கத்தோலிக்க தேவாலயம் தனியார் காணிகளில் அமைக்கப்பட்டிருந்தால், உரிய காணிச் சொந்தக்காரர் தவிர, அந்தக் காணிக்காக தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் தமிழ்ப் பொது அமைப்பினர் களத்தில் இறங்கி காணி உரிமையாளர்களுக்காகப் போராட்டம் நடத்த முன்வருவார்களா? என்றால், அதற்கான பதில் இல்லவே இல்லை என்பதாகவே இருக்கும்.

ஆக, தையிட்டியில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரைக்கான எதிர்ப்பு என்பது தனித்து அது தனியார் காணிகளில் அமையப் பெற்றது என் பதற்கானது மட்டுமல்ல.

மாறாக, பௌத்த விகாரையை நம் தமிழர் பிரதேசத்தில் அமைக்கக் கூடாது என்ற உள்நோக்கமும் கொண்டது என்பதை இங்கு குறித்துரைப்பது அறத்தின் பாற்பட்டதாகும்.

ஆம், செம்மணியில் இருந்த சதுப்பு நிலத்தை உரிய அனுமதிகள் பெற்று தரையாக்கி, அதில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

கூடவே நல்லூரை இராசதானியாகக் கொண்டு இந்த மண்ணை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியனின் அரண்மனையின் மாதிரி அமைப்பை அவ்விடத்தில் நிர்மாணித்து, எங்கள் தமிழர் ஆட்சி வரலாற்றை ஆதாரப்படுத்துவதும் நோக்கமாக இருந்தது.



ஆனால், திடீரென நுழைந்த சிலர் அந்த இடத்தை இலக்கு வைத்தனர்.

செம்மணியின் பரந்த பகுதிகளை ஓரங்கட்டி விட்டு, சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்ட இடத்தை மட்டும் குறிவைத்தது மட்டுமன்றி, பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்தின் மகிமையை துஷ்பிரயோகம் செய்யும் வகையில் பாதணிகளுடன் அவ்விடத்தில் நடமாடுவதும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்துவதுமான காரியங்களும் நடந்தாகின்றன.

இவ்வாறு சிவலிங்கப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள பீடத்திற்கு அருகிலேயே இவ்விதம் நடப்பதென்பது நினையாப் பிரகாரமானதல்ல என்ற உண்மையை சைவ மக்கள் நன்கு அறிந்துள்ளனர் என்பதும் இங்கு சுட்டிக்காட்டுதற்குரியது.

ஆக, தமிழர் பகுதிகளில் விகாரைகள் அமைவதை வெளிப்படையாக எதிர்க்கின்ற அதேநேரத்தில், சைவ அடையாளங்கள் தோற்றம் பெறுவதை மறைமுகமாக எதிர்க்கின்ற ஒரு கூட்டம் நம் மத்தியில் பலம் பெற்றுள்ளமையும் இங்கு உணரப்பட வேண்டிய விடயமாகும்.

இங்கு சைவ அடையாளங்களை மறைமுகமாக எதிர்க்கின்ற தரப்பிற்கும் விகாரையை எதிர்க்கின்ற தரப்புகளுக்கும் இடைத் தொடர்பு இல்லை என்பதையும் இங்கு கூறுவது கட்டாயமானது.

(நாளை தொடரும்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1075





அவர் சுட்டிக் காட்டிய தென்மேற்குத் திசையில் ஓர் அபூர்வமான காட்சி தென்பட்டது. அரைத் தென்னை மரம் உயரமுடைய ஒரு பசுமையான சுவர், நீண்டு படர்ந்து ஓரளவு வளைந்திருந்த விசாலமான சுவர், அந்த வீட்டை நோக்கி இரைச்சலிட்டுக் கொண்டு வந்ததைக் கண்டார்கள். காவேரியின் கரை உடைந்து நீர் வெள்ளம் அப்படிச் சுவரைப் போல் நகர்ந்து வருகிறது என்பதை அங்கிருந்த அனைவரும் ஒரு நொடியில் அறிந்து கொண்டார்கள்.

"அம்மா! வாருங்கள்! எல்லோரும் ஓடி வாருங்கள்! அம்மன் கோவில் மண்டபத்தின் மீது ஏறி நிற்கலாம்! தப்ப வேறு மார்க்கம் இல்லை! திருமலை என் சீடனைப் படகு கொண்டுவர அனுப்பியதே நல்லதாய்ப் போயிற்று! ஓடி வாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே ஜோதிடர் வழி காட்டினார்.

மற்றவர்களும் அவரைப் பின்பற்றினார்கள். பூங்குழலியின் வெறியெல்லாம் இப்போது போய் விட்டது. "தேவி! தாங்கள் சிறிதும் அஞ்ச வேண்டாம். இதைக் காட்டிலும் எத்தனையோ பெரிய வெள்ளங்களை நான் சமாளித்திருக்கிறேன்!" என்று கூறிக் கொண்டே அவள் ஓடினாள். எல்லோருக்கும் முன்னதாகக் கோவில் மண்டபத்தை அடைந்து அதில் தாவி ஏறினாள்.

இதற்குள் வெள்ளம் கோவில் அருகிலும் வந்து சூழ்ந்து கொண்டு விட்டது. கீழே நின்றவர்களின் முழங்கால் வரை ஏறிவிட்டது. ஜோதிடரும், ஆழ்வார்க்கடியானும் தத்தித் தடுமாறி மண்டபத்தின் மீது ஏறினார்கள். குந்தவையும், வானதியும் மட்டும் இன்னும் கீழே நின்றார்கள். இருவரும் ஏற முயன்றார்கள், மேலேயிருந்த பூங்குழலி இளையபிராட்டியின் கைகளைப் பிடித்துத் தூக்கி விட்டாள். வானதி மட்டும் கீழே நின்றாள். அவள் இரண்டு தடவை ஏற முயன்று இரண்டு தடவையும் கைதவறி விட்டு விட்டாள்.

மேலே இருந்த இரு பெண் மணிகளும் அவளைப் பிடித்து மண்டபத்தில் தூக்கி விட முயன்றார்கள். பூங்குழலி ஒரு கரத்தையும் இளைய பிராட்டி குந்தவை ஒரு கரத்தையும் பிடித்துத் தூக்கினார்கள்.

வானதி சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய ஒரு கரத்தைப் பூங்குழலி பிடித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. உடனே அந்தக் கையை உதறினாள். அவள் பிடியிலிருந்து கையை விடுவித்துக் கொண்டாள்.

அந்த வேகத்தில் குந்தவை பிடித்திருந்த கரமும் நழுவி விட்டது. வானதி தொப்பென்று விழுந்தாள் தண்ணீரிலேதான் விழுந்தாள். அதற்குள் தண்ணீர் அவளுடைய கழுத்துவரையில் ஏறி விட்டது. கால் நிலை கொள்ளவில்லை. வானதி தண்ணீரில் மிதந்தாள். வெள்ளம் அவளை அடித்துக் கொண்டு போயிற்று.

இவ்வளவும் ஒரு கணத்தில் நடந்து விட்டது. மண்டபத்தின் மேலேயிருந்தவர்கள், "ஆ!" என்று பரிதாபமாகக் கதறினார்கள்.

சில கண நேரத்துக்குள் வெள்ளம் வானதியை ஜோதிடர் வீட்டுக் கூரைமேல் கொண்டு போய்ச் சேர்த்தது. அந்தக் கூரை மேல் அவள் ஏறிக்கொண்டாள். "நல்ல வேளை! அபாயம் ஒன்றுமில்லை!" என்று எண்ணினாள்.

மண்டபத்தின் மேலிருந்தவர்களும் அவளைப் பார்த்தார்கள். வீட்டுக் கூரை மீது தொத்திக் கொண்டதைப் பார்த்தார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்னப்பறவைகளும் வாத்துக்கூட்டமும்



அது ஒரு மலைப் பிரதேசம். அதில் ஒரு நீர் வீழ்ச்சியை ஒட்டித் தடாகம் ஒன்று இருந்தது. தடாகம் நாற்புறமும் ஒரே சீரான கரைகளைக் கொண்டதாக இருந்தது. அதில் எப்போதும் தண்ணீர் நிரம்பி இருந்தது. தடாகத்தில் நான்கு அன்னப்பறவைகள் வசித்து வந்தன. தடாகத்தின் கிழக்குப் பக்கம் ஒரு படித்துறை. படித் துறையை ஒட்டி கரையில் ஒரு சிறு கோவில் மற்றும் ஒரு தியான மண்டபம். அந்த வனத்தில் துறவி ஒருவர் வசித்து வந்தார். அவர் கோவிலையும் மண்டபத்தையும் பராமரித்து வந்தார்.

தடாகத்தில் ஏராளம் தாமரை அல்லி மலர்கள் பூத்துக் கிடந்தன. நண்டு, நத்தை, தவளை, மீன்கள், சிறு புழுபூச்சிகள் இவைகள் வசித்து வந்தன. கரையைச் சுற்றிலும் ஓங்கி வளர்ந்த விருட்சங்கள் இருந்தன. எப்போதாவது மலங்காட்டிற்கு விறகு பொறுக்க ஒன்றிரெண்டு ஆட்கள் வருவார்கள். மற்றபடி அந்தப் பகுதி அதிக நடமாட்டம் இல்லாமல் இருந்தது. அன்னப் பறவைகள் இனிமையான சூழலில் எந்த வித அச்சமுமின்றி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன.

தடாகத்தின் மேற்குக் கரைப் பக்கம் படித்துறையை ஒட்டி வாத்துக் கூட்டம் ஒன்று வசித்து வந்தது. வாத்துக்களை அன்னப்பறவைகளுக்குப் பிடிக்காது. அவைகள் எப்போதும் தண்ணீரில் மிதந்தபடி சோம்பலாய் தூங்கும். கரைக்குச் சென்றால் சேறும் சகதியுமான இடத்தில் புரண்டு எழும். ஏதாவது ஒரு வாத்து வானத்தை அண்ணார்ந்து பார்த்து கத்தினால் போதும். மற்ற வாத்துகளும் மொத்தாமாய் சேர்ந்து கொண்டு 'குவாக் குவாக்' என்று குரல் கொடுக்க ஆரம்பித்து விடும். இதனால் அன்னப்பறவைகள் வாத்துகளை வெறுத்தன.

அவைகளிடம் நட்பு பாராட்டாமல் இருந்தன. தங்கள் பக்கம் அவைகளை அண்ட விடாமல் பார்த்துக் கொண்டன. வாத்துகளுக்கு அன்னப்பறவைகள் தங்களிடம் நேசமாக இல்லை என்ற வருத்தம் இருந்தது.

துறவி தினந்தோறும் அருவியில் நீராடுவார். தடாகத்தில் தாமரைப் புஷ்பங்களைப் பறித்துக் கொண்டு போவார். கோவிலில் பூஜைகள் செய்வார். மண்டபத்தில் அமர்ந்து தியானத்தில் ஈடுபடுவார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சோமரத்ன ராஜபக்ஷவை செம்மணிக்கு கூட்டி வரவேண்டும்

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் முதன் முதலில் தகவல் வழங்கியவர்; மாணவி கிருஷாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை பெற்ற லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ என்பது தெரிந்த உண்மை.

யாழ்ப்பாணம் செம்மணியில் மனிதப் புதைகுழி உண்டு என அவர் தெரிவித்ததன் காரணமாக அவர் செம்மணிக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

எனினும் புதைகுழி உள்ளதாக அவர் அடையாளம் காட்டிய இடத்தை அகழ்ந்த போது, அங்கு என்புக்கூடுகள் எதுவும் கிடைக்கவில்லை.

இதனால் சோமரத்ன ராஜபக்ஷவின் தகவல்கள் குறித்த கவனம் பெரிதுபடவில்லை. ஆயினும் செம்மணி சித்துப்பாத்தி மயானத்தின் கட்டுமானப் பணியின் பொருட்டு அங்கு அத்திபாரம் வெட்டிய போது, என்புக் கூடுகள் வெளிவந்ததையடுத்து அத்திபாரம் வெட்டும் பணி இடைநிறுத்தப்பட்டு குறித்த விவகாரம் பொலிஸ் ஊடாக நீதிமன்றத்தின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டது.

இச்சம்பவம் நடந்த போது, இந்த நாட்டில் ஆட்சி மாற்றமும் ஏற்பட்டு அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அமையப்பெற்றிருந்தது.

நீதிமன்றத்தின் உத்தரவில் அங்கு அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கான நிதியை அரசாங்கம் ஒதுக்கியிருந்தது.

மேற்படி அகழ்வுப் பணிகளின் போது இதுவரை 412 என்புத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 412 என்புத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்ட அதிர்ச்சியில் நம் மக்கள் உறைந்திருக்கும் வேளையில், செம்மணிப் பகுதியில் மேலும் சில இடங்களில் மனிதப் புதைகுழிகள் இருப்பதாக சோமரத்ன ராஜபக்ஷ தற்போது கூறியிருப்பது பேரதிர்ச்சியைத் தருவதாகும்.

ஆம், செம்மணியில் மனிதப் புதைகுழி உண்டு என ஏலவே நீதிமன்றில் சோமரத்ன தெரிவித்திருந்ததுடன்; தான் செம்மணி படைமுகாமில் கடமையாற்றிய போது, இராணுவ அதிகாரிகள் தமிழ் இளைஞர்களைச் சுட்டு உயிரற்ற உடலங்களை செம்மணிக்கு அனுப்பி அவற்றைப் புதைக்குமாறு கட்டளையிடுவார்கள் எனவும் கூறியிருந்தார்.

அவர் கூறிய வாக்குமூலத்தின் உண்மைத் தன்மையை செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இருந்து அகழ்ந்தெடுக்கப்படும் மனித என்புத் தொகுதிகள் உறுதி செய்வதாக உள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது மீண்டும் சோமரத்ன ஓர் அதிர்ச்சித் தகவலைக் கூறியுள்ளார்.

ஆம், செம்மணியில் இன்னும் மனிதப் புதைகுழிகள் உண்டு என்பதே அந்த அதிர்ச்சித் தகவலாகும்.

ஆக, சோமரத்ன ராஜபக்ஷ கூறிய மேற்போந்த தகவலின் பிரகாரம் அவரை செம்மணிக்கு மீளவும் கூட்டி வந்து, அவர் மூலம் குறித்த இடங்களை அடையாளம் காட்டுவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்தாக வேண்டும்.

## அரச நிறுவனத்தின் பெயரால் நிதி மோசடி; ஒருவர் கைது

(கொழும்பு)

இறைவரித் திணைக்களத்தின் அதிகாரி எனப் போலி அடையாளத்தைக் காட்டி பண மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவர் கொம்பனித் தெரு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இறைவரித் திணைக்களத்தின் அதிகாரி எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, சந்தேக நபர் பல்வேறு நபர்களிடம் பணம் மோசடி செய்துள்ளதாக கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கல்கமுவ பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபர் ஆவார் எனவும் சந்தேக நபர் இதற்கு முன்னரும் இது போன்ற பண மோசடிச் சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## ஊழலுக்கு எதிராக வவுனியாவில் சுவரொட்டி

(வவுனியா)

வவுனியா நகரின் பல்வேறு பகுதிகளிலும் ஊழலுக்கு எதிராக சுவரொட்டிகள், அறிவித்தல் பலகைகளிலும் சுவர்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

அதில், "வவுனியா மாநகர மக்களே ஊழல் வாதிகளுக்கு துணை நிற்காதீர், ஊழல் புரிவது நீங்கள் பாதிக்கபடுவது மக்களா?, சொகுசு வாழ்க்கை உங்களுக்கு சுமை மட்டும் மக்களுக்கு, இலஞ்சம் பெறுவது நீங்கள் பாதிக்கப்படுவது மக்கள்" எனப் பல்வேறு வாசகங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

வடக்கு ஆளுநரால் வவுனியா மாநகரசபை மேயர் பதவி நீக்கத்திற்கு எதிராக கதவடைப்பு மற்றும் ஆர்ப்பாட்டம் என்பன இடம்பெற்ற நிலையில் இப்பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## களுபோவில வைத்தியசாலையில் அதிநவீன இதய சிகிச்சை பிரிவு

கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனையில் (களுபோவில) புதிதாக நிறுவப்பட்ட இதய வடிகுழாய்ச் சிகிச்சை ஆய்வகப் பிரிவு உள்ளிட்ட அதிநவீன மருத்துவ உபகரண வசதிகள் இன்று (ஜூன் 30) பொதுமக்கள் பயன்பாட்டிற்காகக் கையளிக்கப்படவுள்ளது.

நாட்டில் இருதயம் மற்றும் இரத்த நாள நோய் சிகிச்சை சேவைகளை வலுப்படுத்தும் நோக்கில், இந்த வாரத்திற்குள் அரசாங்க வைத்தியசாலை அமைப்பில் 04 புதிய கேத் லேப் (Cath Lab) பிரிவுகளை இணைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கேத் லேப் பிரிவு கடந்த 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சுழன்றடிக்கும் காற்று கொந்தளிக்கும் கடல்

### வளிமண்டலவியல் திணைக்களத்தால் "அம்பர்" நிற எச்சரிக்கை பிறப்பிப்பு

காங்கேசன் துறை முதல் மன்னார், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பகுதிகளில் பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பான கடல்நிலைமை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் "அம்பர்" நிற எச்சரிக்கையை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று (29) முற்பகல் 11.00 மணிக்கு வெளியிடப்பட்டுள்ள இந்த விசேட 'அம்பர்' நிறத்திலான எச்சரிக்கை இன்று (30) முற்பகல் 11.00 மணிவரை செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த அறிக்கையில்,

காங்கேசன் துறை முதல் மன்னார், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என்பதுடன் மணிக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளையில் சிலாபம் முதல் கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் அலைகளின் உயரம் சுமார் 2.0 முதல் 3.0 மீற்றர் வரை உயரக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## இராஜகோபுர கும்பாபிஷேகம்

(பொலிகண்டி)

யாழ்ப்பாணம் வடமராட்சி பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய அதிசுந்தர நூதன பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.26 மணி முதல் 9.02 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை காலை 9.15 மணியளவில் கிரியாரம்பமும் மாலை 3.00 மணியளவில் விமான கலசஸ்தாபனமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8)

## குளத்தில் நீராடிய குடும்பஸ்தர் உயிரிழப்பு

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேசத்திற்குட்பட்ட வளத்தாப்பிட்டி பகுதியில் உள்ள குளத்தில் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் நேற்று(29) திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் வளத்தாப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையே (வயது - 63) உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பான தகவல் கிடைத்தவுடன் அம்பாறை மாவட்ட உயிர்காப்பு மற்றும் அவசர மீட்புக் குழுவினர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றதுடன் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் நீண்ட நேரம் குடும்பஸ்தரை மீட்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டபோதும் அவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.அல் ஜவாஹிர் மேற்கொண்டார். (ம-7)

## மோ.சைக்கிள் விபத்து இளைஞன் உயிரிழப்பு

ஹெட்டிப்பொல பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (28) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஹெட்டிப்பொல ஹந்துன்கமுவ வீதியின் 42 வது கிலோமீற்றர் தூணுக்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த இளைஞரொருவர் உடனடியாக ஹந்துன்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மஹியங்கனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஹந்துன்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் கிண்ண உதைபந்தாட்டம் அரையிறுதிக்கு முன்னேறியது வல்வை அணி



(கரணவாய்)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் 40 வயதுக்கு மேற்போட்டோர் அணிகளுக்கிடையிலான தலைவர் கிண்ண உதைபந்தாட்ட போட்டித் தொடரின் இறுதி லீக் ஆட்டத்தில் அண்ணா சிலையடி அணியை வீழ்த்தி வல்வை அணி அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

குறித்த போட்டித் தொடரின் லீக் ஆட்டத்தின் கடைசி போட்டிகடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்திய நிலையில் ஆட்டத்தின் நிறைவில் 3 : 2 என்ற கோல் கணக்கில் வல்வை அணி வெற்றி பெற்றது. இதையடுத்து குழு - 2 இல் இருந்து வல்வை அணி இரண்டாவது அணியாக அரை இறுதிக்கு முன்னேறியது.

வல்வை அணியின் தாஸ் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டு பதக்கம் அணிவித்து மதிப்பளிக்கப்பட்டது.

இதையடுத்து குழு ஒன்றில் முதலிடம் பெற்ற கொலின்ஸ் அணியுடன் வல்வை அணியும், குழு இரண்டில் முதலிடம் பெற்ற ரேஞ்சர்ஸ் அணியுடன் ஐக்கிய விளையாட்டு கழகமும் அரை இறுதியில் பலப்பரீட்சை நடத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-60)



கவிவேந்தர் பொன். சுகந்தனின் மண்மூடி என்னும் ஹைக்கூ கவிதை புத்தகம் அண்மையில் கொழும்பு தமிழ் சங்கத்தில் சங்கத்தின் தலைவி சட்டத்தரணி சுகந்தி இராஜ குலேந்திரா தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 180 | 200 | 150 | 240 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | -- | 220 |
| பச்சைமிளகாய் | 600 | 550 | 800 | 550 | 700 |
| தக்காளி | 750 | 800 | 800 | 620 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150 | 250 |
| கோவா | 250 | 250 | 300 | 250 | 250 |
| கரட் | 400 | 400 | 450 | 380 | 400 |
| பூசணி | 130 | 140 | 150 | 100 | 150 |
| புடோல் | 200 | 200 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | -- | 200 |
| பாகற்காய் | 1200 | 2000 | 1500 | 1800 | 1400 |
| வெண்டைக்காய் | 200 | 200 | 150 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 320 | 300 | 400 | 400 |
| பயற்றங்காய் | 600 | 250 | 400 | 350 | 350 |
| லீக்ஸ் | 400 | 400 | 500 | 350 | 350 |
| பீற்றூட் | 350 | 450 | 600 | 400 | 500 |
| கறிமிளகாய் | 400 | 500 | 500 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 500 | 350 | 450 |
| போஞ்சி | 450 | 500 | 600 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 120 | 200 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 450 | 400 | 500 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 150 | 110 | 100-140 |
| இராசவள்ளி | 400 | 400 | 500 | 350 | 350 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | 420 | 500 |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 300 | 150 | -- | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | -- | 100 |
| ஈரப்பலா | -- | 150 | 150 | -- | -- |




ரிதுஷ்




மதுரா





சஞ்சனா




விதுரா




டேவிட்




மேனகன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மறை...

1966ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் 2000ஆம் ஆண்டு கொழும்பு மறைமாவட்ட குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு பல இடங்களிலும் சமய, கல்வி மற்றும் நிர்வாகப் பணியாற்றியுள்ளதுடன் உரோமில் இறையியல் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் இளங்கலைப் பட்டத்தையும் கொழும்பில் கல்வியியல் டிப்ளோமாவையும் ஐக்கிய இராச்சியத்தில் கல்வியியலில் முதுகலைப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து 2020ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13ஆம் திகதி அப்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயராக நியமிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டதுடன் 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகராகவும் நியமனம் பெற்று பணியாற்றி வருகின்றார்.

தற்போதைய ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் ஓய்வு காரணமாக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயராக பணியாற்றி வந்த இவர் யாழ். மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)
























## வன்முறை...

ஒன்று வீடு புகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான குடும்பத்தினர் மீற்றர் வட்டிக்குப் பணத்தினை பெற்றுவிட்டு அதனை அடைப்பதற்கு வாங்கிய பணத்தின் பல மடங்கு பணமானது செலுத்தப்பட்டும் கடன் தீரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் வட்டிக்குப் பணத்தினைப் பெற்றவர்களுக்கும் கொடுத்தவர்களுக்கும் இடையே கடந்த சனிக்கிழமை முரண்பாடு ஏற்பட்ட நிலையில் அன்றிரவு அங்கு வந்த வன்முறைக் கும்பலால் பணத்தினைப் பெற்றவரது வீடு மீது இவ்வாறு தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,30,104)

## எரிபொருள்...

ருப்பில் எந்தவிதப் பிரச்சினையும் ஏற்படாது என்றும் மக்கள் தேவையற்ற வகையில் அச்சப்பட வேண்டாம் என்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் மயூர நெத்திகுமார தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ பெற்றோலிய சேமிப்பக வளாகம் நேற்று முன்தினமும் (28) நேற்றும் (29) மூடப்பட்டுள்ளதால் எரிபொருள் வரிசைகள் ஏற்படலாம் என பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (28ஆம் திகதி) திங்கட்கிழமை (29ஆம் திகதி) ஆகிய இரண்டு நாட்களுக்குத் தேவையான எரிபொருள் கடந்த 27ஆம் திகதி சனிக்கிழமை வழங்கப்பட்டதாக சங்கம் கூறியுள்ளது. அன்றைய தினம் பதிவு செய்யப்பட்ட பெருமளவான எரிபொருள் கையிருப்பு நேற்று முன்தினம் (28) மாலையுடன் தீர்ந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, ஒவ்வொரு மாதமும் தொடர்ச்சியாக இரண்டு நாட்களுக்கு எரிபொருள் வழங்கப்படுவதில்லை எனவும் அது சாதாரண நிகழ்வு என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் மயூர நெத்திகுமார விளக்கமளித்துள்ளார்.

எனவே எரிபொருள் கையிருப்பில் எந்தவிதப் பிரச்சினையும் ஏற்படாது என்றும் மக்கள் அச்சப்பட வேண்டாம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## அரச உயர்...

சட்டத்தின் கீழ் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

சொத்து மற்றும் பொறுப்புகள் பிரகடனங்கள் அனைத்தும் அதற்குரிய உத்தியோகபூர்வ இணையத்தளமான https://ald.ciaboc.gov.lk/ என்ற இணையத்தளத்தின் ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும்என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட காலக்கெடுவுக்குப் பிறகு சொத்துப் பிரகடனங்களைச் சமர்ப்பிக்கும் அரச உயர் அதிகாரிகளுக்கு அபராதம் விதிக்கப்படும் என கையூட்டல் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## இனவாத, மதவாத...

கொழும்பு தாமரைக் கோபுர வளாகத்தில் நடைபெற்றது.

அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் விஜித ஹேரத், கடந்த காலங்களில் எமது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருந்தது.

பல வருட கால கசப்பான யுத்தத்திற்குப் பின்னர், நாட்டை தேசிய ஒற்றுமையுடன் கட்டியெழுப்புவதற்கு எமக்கு ஒரு பொன்னான வாய்ப்பு கிடைத்திருந்த போதிலும் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதிகளில் மிகவும் திட்டமிட்ட வகையில் இனவாதமும் மதவாதமும் தூண்டப்பட்டு நாடு மீண்டும் பிளவுபடுத்தப்பட்டது.

ஆனால் 2024 ஆம் ஆண்டிற்குப் பிறகு இவ்வாறான எந்தவொரு இனவாதம் அல்லது மதவாத மோதல்களுக்கு இடமில்லை. நாட்டின் பொருளாதாரம், ஒழுக்கம், சட்டம் மற்றும் நாகரிகத்தை கட்டியெழுப்புவதற்கு சிங்களம், தமிழ், முஸ்லிம், பறங்கியர்மற்றும்மலாய் என நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து வாழ வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இனவாதம் மற்றும் மதவாதத்தை உருவாக்கி நாட்டை பிளவுபடுத்திய கடந்த காலம் முடிவுக்கு வந்துள்ளது. தற்போது அனைத்து இனமக்களும் இணைந்து வாழக்கூடிய ஒழுக்கமான மற்றும் நாகரிகமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு புதிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

முஸ்லிமாக இருந்தாலும் சரி, சிங்களவராக இருந்தாலும் சரி, நாம் அனைவரும் மனிதர்கள். எம்மிடையே எந்த வேறுபாடும் இல்லை. மொழி, மதம், சாதி அல்லது வேறு எந்தப் பாகுபாடும் இன்றி நாம் அனைவரும் ஒரே தாயின் பிள்ளைகளைப் போல ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றார். (ம-7)

## பெற்றோல், டீசல்...

கப்பட்டு அதன் புதிய விலை 382 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 95 ஒக்டேன் பெற்றோல் (495 ரூபா), லங்கா சுப்பர் டீசல் (478 ரூபா) மற்றும் மண்ணெண்ணெய் (285 ரூபா) ஆகிய எரிபொருள் வகைகளின் விலைகளில் எவ்வித மாற்றங்களும் இல்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ம-7)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கம்முன்னால் நேற்று குறித்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றதுடன், அங்கிருந்து மன்னார் வீதி வழியாக ஊர் வலமாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் காமினி மகா வித்தியாலயம்முன்பாக நின்று கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

வடக்கு மாகாண ஆளுநரால் கடந்த 24ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி மூலம் வவுனியா மாநகரசபை மேயர் சு.காண்டீபனின் பதவி பறிக்கப்பட்டதுடன் அவரது மாநகர சபை உறுப்புரிமையும் பறிக்கப் பட்டிருந்தது.

இதனைக் கண்டித்து இடம் பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் ஆளுநரே ஜனநாயகப் படுகொலையை நிறுத்து, ஜேவிபியின் முகவராக ஆளுநரே செயற்படாதே, மக்கள் ஆணைக்கு மதிப்பளி, தையிட்டியில் பாராமுகம் மாநகர சபையில் பழிவாங்கலா, ஊழல் அறிக்கையை வெளிப் படுத்து என பல்வேறு கோசங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான றிசாட் பதியுதீன், ப.சத்தியலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம், முத்து முகமது, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான செ.மயூரன், சிவநேசன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை வடக்கு ஆளுநரின் செயற்பாட்டைக் கண்டித்து வவுனியா நகரப் பகுதியில் இருந்த வர்த்தக நிலையங்களில் 50 வீதமான வர்த்தக நிலையங்களை வர்த்தகர்கள் சுமார் 3 மணிநேரம் மூடி தமது எதிர்ப்பை வெளிப் படுத்தி இருந்தனர். ஏனைய வர்த்தக நிலையங்கள் வழமை போல் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

## போதைப்...

முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளில் தற்போது நெத்தலிகளுடன் சுறாக்களும் அகப்படுகின்றன. அரசியல் ஆசீர்வாதத்துடன்தான் போதைப் பொருள் வர்த்தகமும், பாதாளக்குழுக்களும் எழுச்சி பெற்றன. எதிர்வரும் காலப்பகுதியில் பிரதான தரப்பினர் பலர் கைது செய்யப்படுவார்கள்.

2025ஆம் ஆண்டில் மாத்திரம் சுமார் 54,000 மில்லியன் ரூபா மதிப்புள்ள போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இந்த நடவடிக்கை 2026 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் தீவிரமாகத் தொடர்ந்ததால், மொத்த போதைப் பொருட்களின் சந்தை மதிப்பு 226 பில்லியன் ரூபாவை (22600 கோடி ரூபா) எட்டியுள்ளது. கடற்படை மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் பெரும்பாலும் கடல் எல்லைகளிலேயே இவை முறியடிக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் வலையமைப்பை ஒழிப்பதற்காகத் தகவலாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடத்தல்காரர்கள் பற்றிய விபரங்களை வழங்கிய பொது மக்கள் மற்றும் சோதனைகளில் ஈடுபட்ட பொலிஸார், கடற்படையினருக்கு 785 மில்லியன் ரூபாவிற்கும் அதிக தொகை பணப் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் ஒழிப்புக்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறான நடவடிக்கைகளினால் தான் தற்போது நெத்தலி மீன்களும் சுறாக்களும் அகப்படுகின்றன. கடந்த காலங்களில்போதைப்பொருள் விவகாரத்தில் பாவனையாளர்கள் மாத்திரமே கைது செய்யப்பட்டார்கள். ஆனால் தற்போது பிரதான போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாதாளக் குழுக்களுடன் தொடர்புக் கொண்டிருந்த அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள் உட்பட பலர் கைது செய்யப் பட்டுள்ளார்கள். இதுவே முறைமை மாற்றமாகும் என்றார். (ம-7)

# நயினாதீவில் மின்வெட்டுக்கு எதிராக மக்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா தற்பொழுது மிக விமர்சையாக நடைபெற்று வரும் நிலையில், தீவகப் பகுதியில் மின்சார சபையினரால் ஏற்படுத்தப்படும் தொடர் மின்வெட்டைக் கண்டித்து, மக்கள் நேற்று திங்கட்கிழமை வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் நீண்ட நேரம் நீடிக்கும் இந்த மின்வெட்டு காரணமாக, நயினாதீவுக்கு வருகை தந்த பக்தர்களும் உள்ளூர் பொதுமக்களும் கடும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், நயினாதீவு பெருந்திருவிழாக் காலத்தில் எவ்வித தடையுமின்றி 24 மணித்தியாலமும் தடையற்ற மின்சாரம் வழங்கப்படும் என அதிகாரிகளினால் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

பெருந்திருவிழாவை முன்னிட்டு உள்நாட்டில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் நாள்தோறும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நயினாதீவுக்கு வந்தவண்ணம் உள்ளனர். இவ்வாறானதொரு மக்கள் நெரிசல்மிக்க புனித பூமியில், இரவு நேரங்களில் திடீரென மின்சாரம் தடைப்படுவது பெரும் பாதுகாப்பு அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

எனவே, எஞ்சிய திருவிழா நாட்களிலாவது எவ்வித தடையுமின்றி தடையற்ற மின்விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும் என நயினாதீவு மக்களும் பக்தர்களும் அவசரக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7)

# படகு விபத்து இருவர் பலி

(கொழும்பு)

ரிதீமாலியத்த - குருவிதென்ன, தொட்டிலேயாய பகுதியில் அமைந்துள்ள லொக்கல்லா ஓயா நீர்த்தேக்கத்தில் படகு சவாரி செய்து கொண்டிருந்த இருவர் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் கடுகஸ்தோட்டை மற்றும் பூஜாரப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 40 மற்றும் 48 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)


## வேலைவாய்ப்பு

யாழ் நகரத்தில் அமைந்துள்ள மாபிள் காட்சியறைக்கு Customer Care Assistant (வாடிக்கையாளர் சேவை உதவியாளர்) பதவிக்கு நீங்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பிற்கு:
077 698 3583
kajikpk@gmail.com
(C-5951)

## தேவை

யாழ்ப்பாணத்தில் ஒரு பழைமை வாய்ந்த நாற்சார் வீட்டுடன் 8 பரப்பு, 16 பரப்பு விலைக்கு தேவை.
(2463)

தொடர்பு கொள்ளவும்
077 - 2403439
077 - 125 9125 (WhatsApp)


**வெறுப்பு யாருக்கு எதிராகவும் திரும்பலாம்**

**நினைவில் கொள்ள :**
**நீங்கள் வெறுப்பூட்டும் தகவலை பகிரும் போது**

நாளை அதே வெறுப்பின் இலக்காக நீங்களும் மாறலாம்.

நிகழ்நிலையில் உள்ள தீங்கு விளைவிக்கும் கதைகள் பெரும்பாலும் கோபம், பயம் மற்றும் சமூகப் பிரிவினையை உருவாக்கும் அரசியல் அல்லது தனிப்பட்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகின்றன.

அதை தொடர்ந்தும் பரப்பாதீர்கள்.
வெறுப்பை அதன் முளையிலேயே கிள்ளி எறியுங்கள்.

இந்த செய்தி SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

(7775)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மாங்குளம், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5953)
076 825 7716 (ஆகாஸ்)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு.கார்த்திகேசு இராமச்சந்திரன்
அவர்களின் அன்பு மாமியார்

**அமரர் வேதாரணியம் நல்லம்மா**



தோற்றம் : 12.02.1936 மறைவு : 28.06.2026

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத்துயருடன்
சேவையாளர் சங்கம்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

(2465)


38 ஆவது வருடாந்த கல்விச் சேவையில்...

## நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு அமைய

**O/L DAY CLASS**

ஆரம்பம் 29.06.2026 திங்கள் காலை 08.30

யாழ் நகரின் NO.01 கல்வி நிறுவனம்

- தனிப்பட்ட கவனிப்பு
- அலகுப் பரீட்சைகள் நடைபெறும்
- PAPER CLASS நடைபெறும்

அனுமதிகளை உங்களுடைய பெற்றோர்களுடன் வருகை தந்து பெற்றுக்கொள்ளவும்

இன்று முதல் அனுமதிகள் வழங்கப்படுகிறது.

(C-5950)

மேலதிக விபரங்களுக்கு : 077 459 8440



இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org